**அக்கரைப்பற்று மாநகர சபை - 2023**

**---------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் 1.6.1(அ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான சோலைவரிக் கழிவு ரூபா 309,326 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி கழிவீடுகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய காலப்பகுதியில் சோலைவரி கழிவுத் தொகைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரை பதிவழிக்கப்பட்ட 739 புத்தகங்கள் மற்றும் ஏல விற்பனை செய்யப்பட்ட 434 பொருட்கள் ஆகியவற்றின் கிரயங்கள் ரூபா 176,776 நிலையான சொத்துக்களின் கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்கறிக்கையில் கழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் கிரயத்தினை முறையாக இனங்கண்டு கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2021 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் நன்கொடையாக கிடைத்த பொருட்களின் மொத்தக் கூட்டுப் பெறுமதி ரூபா 1,334,116 நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் இக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். | நன்கொடை பொருட்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 | | | |
| | (i) 247(ஈ) பிரிவு | மாநகர சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளினை இனங்கண்டு அவற்றிற்கு ஆதனவரி அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | K படிவங்கள் வழங்கும் போது அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 252 பிரிவு | ரூபா 52,622,490 தொகையான ஆதனவரியினை செலுத்தாத ஆதன உரிமையாளர்களுக்கெதிராக எழுத்திலான அறிவித்தலொன்றினை விடுத்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட ஆதனத்தை தடை செய்ய மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி செலுத்தாத வரி இறுப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் பிரகாரம் வரிகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம், அறவிட வேண்டிய நிலுவையை விரைவாக அறவிடுவதற்குத் தேவையான நடைமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு | 2011 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 12,960 ஆதனங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததடன், அவ் ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்ய மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அச் செயற்பாடுகள் நிறைவுற்றதும், மீளமைக்கப்பட்ட ஆதன வரியினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம், அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1),(2),(3) | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,695,738 தொகையான 86 காலங் கடந்த வைப்பு காணப்பட்டிருந்தம், அத்தொகையினை உரியவர்களுக்கு திருப்பி கொடுப்பதற்கு அல்லது வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் இக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பான நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 32,126,681 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 22,325,733 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 18,253,530 | 74,851,791 | 7,475,946 | 67,375,845 | 16,953,530 | 60,981,177 | 8,358,686 | 52,622,490 |
| (ii) | வாடகை | 31,837,148 | 41,007,058 | 17,768,544 | 23,238,514 | 23,470,608 | 35,876,692 | 12,578,997 | 23,297,695 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 10,200,000 | 4,046,200 | 4,034,000 | 12,200 | 5,200,000 | 3,475,500 | 3,475,500 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 44,015,000 | 47,158,170 | 47,158,170 | - | 41,850,000 | 82,203,621 | 82,203,621 | - |
| (v) | கூட்டுத் தொகை | 104,305,678 | 167,063,219 | 76,436,660 | 90,626,559 | 87,474,138 | 182,536,990 | 106,616,804 | 75,920,185 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடவேண்டியதாக காணப்பட்ட ஆதனவரி ரூபா 67,375,845 தொகையில் ரூபா 55,839,877 தொகையான நிலுவை 01 முதல் 08 ஆண்டுகள் வரை காணப்பட்டிருந்தது. | வருமான பரிசோதகர்கள் இன்மையால் பட்டியல்படுத்தப்பட்ட வருமானங்களை நிலுவையின்றி அறவிட முடியாமலுள்ளதுடன், எதிர்காலத்தில் நடுக்கட்டு உத்தியோகத்தர்களை நியமித்து நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 150 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 13,685,441 தொகை 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மற்றும் அடையாளம் காண முடியாத நிலவையளர் களின் நிலுவைகளை பதிவழிப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ii) | 1992 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய குத்தகை வழங்கலிலிருந்து பெறவேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 8,413,702 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (iii) | மீளாய்வாண்டிற்காக ஜெசீபீ, டிப்பர், களிவவசர், Excavator மற்றும் ஏனைய இயந்திரங்கள் ஆகியவற்றின் மூலம் வாடகை வருமானமாக ரூபா 4,250,000 தொகை பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 106,000 தொகை மாத்திரமே வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. மேலும், இவ் வாகனங்களினை வாடகைக்கு வழங்குதல் மற்றும் சபையின் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இயந்திரங்கள் மூலம் பெறப்பட்ட வாடகை வருமானம், பெறப்பட்ட முற்பணம், பெறவேண்டிய நிலுவைகள், பயன்படுத்திய பாவனை மணித்தியாலங்கள், பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவுகள் | கேள்விக் கோரல் குறைவாக இருந்தமையினாலும், வாடகைக்கு வழங்கப்படாமையினாலும், வருமானம் குறைவாக காணப்பட்டது. இவ் வருடத்தில் வாகனங்களின் வாடகை வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகன வாடகை தொடர்பில் விபரமான பதிவேடு பேணுவதற்கும், வாகனங்களுக்கு ஏற்படும் செலவினங்களை ஈடு செய்யக்கூடிய வகையிலும், வருமானத்தினை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பவற்றின் உண்மைத்தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | | |
| **(இ)** | **உத்தரவுப் பத்திரக் கட்டணம்** | | |
| (i) | மீளாய்வாண்டுக்காக 739 கடைகளுக்கு வியாபார அனுமதிப் பத்திரக்கட்டணமாக ரூபா 3,330,000 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 189 வியாபார நிறுவனங்களுக்கு மாத்திரம் வருடாந்த வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | வியாபார அனுமதிப் பத்திர கட்டணம் செலுத்தியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வருடத்திற்கான அனுமதிப் பத்திரங்களை உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விளம்பர பதாதைகள் தொடர்பான விபரமான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டில் 130 விளம்பரப் பதாதைக்கான கட்டணமாக ரூபா 305,250 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், துணைவிதிகள் அல்லது அனுமதிகளை பெற்று பாதீடப்பட்ட ரூபா 3,500,000 தொகையான வருமானங்களை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண பதிவேட்டில் விளம்பர பதாதை கட்டணங்களின் விபரங்களை சேர்த்துக் கொள்வதற்கும், எதிர்காலத்தில் துணை விதிகளை தயாரித்து அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | துணை விதிகளை உருவாக்கி உரிய அனுமதியினை பெற்று வருமானங்களினை முழுமையாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஏர்டெல், மொபிடல் மற்றும் டயலொக் ஆகிய தொலைத்தொடர்புக் கோபுரத்திற்காக 2021 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வாடகை நிலுவையாக ரூபா 770,657 தொகை காணப்பட்டிருந்ததும், அவற்றினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவகைளை செலுத்தி முடிக்கும் படி உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை யான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் விஷேட திண்மக்கழிவகற்றல் கட்டண வருமானமாக ரூபா 1,000,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தும், அறவீடானது ரூபா 74,500 தொகை தொடக்கம் ரூபா 144,500 தொகை வரையான வீச்சில் காணப்பட்டிருந்தது. | நடப்பாண்டில் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்களில் அரைப்பங்குத் தொகையை விசேட திண்மக் கழிவகற்றல் கட்டணமாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விஷேட திண்மக்கழிவகற்றல் கட்டணத்திற்கான வருமான மதிப்பீடானது இயன்றவரை உண்மையான தரவுகள் மற்றும் கடந்த கால வருமானங்கள் போன்றவற்றை கருத்திற் கொண்டு நேர்த்தியாக மதிப்பிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிகளில் பெறவேண்டிய ரூபா 812,550 தொகையான முத்திரைக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானத்தை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தனியானதொரு வருமானப் பிரிவொன்று உருவாக்கப்பட்டு வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காததனால் மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானமாக ரூபா 117,805,679 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு நிலுவை அறவீடு உட்பட மொத்த அறவீடு ரூபா 59,982,745 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், அறவீட்டுச் சதவீதம் 50 சதவீதமாக காணப்பட்டிருந்தது. | நிதி நெருக்கடி சீரானதும் தனியானதொரு வருமானப் பிரிவு ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வருமானப் பிரிவொன்றினை ஆரம்பித்து பாதிடப்பட்ட வருமானங்களை முழுமையாக அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக்குச் சொந்தமானதும், பயன்பாட்டில் உள்ளதுமான 28 காணி கட்டிடங்கள் மற்றும் 60 மோட்டார் வாகனங்களின் பெறுமதிகளை மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகளை மீள் மதிப்பீட்டு செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | மிக விரைவாக மீள்மதிப்பீடு செய்து உண்மைப் பெறுமதிகளை நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2011 ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் ஊழியரொருவருக்கும் மற்றும் சனசமூக நிலையமொன்றிற்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 106,003 தொகையான 02 முற்பணங்களினை அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த மீதிகளை பதிவழிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முற்பணமாக வழங்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊழியர் சேமலாப நிதியாக ரூபா 285,600 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியாக ரூபா 26,930 தொகையும் செலுத்தப்படாமல் மீளாய்வாண்டு இறுதி வரை மீளளிக்கத்தக்க வைப்பு கணக்கில் பேணப்பட்டு வருவதுடன் அத்தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்திற்கு நடப்பாண்டில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தொகையினை உறுதிப்படுத்தி உரிய அனுமதியுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கடையறை வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்யாமல் 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 1,000 தொடக்கம் ரூபா 5,250 தொகை வரையிலான வீச்சில் கடையறைகள் வாடகைக்கு வழங்கப்பட்டமையினால் அண்ணளவாக ரூபா 10,000,000 தொகையான வருமானத்தினை வருடாந்தம் சபை இழந்து வருகின்றது. | மீள் மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், வாடகையினை காலத்திற்கு காலம் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற இலத்திரனியல் விளம்பர தொலைக்காட்சியானது 2019 ஆம் ஆண்டில் பழுதடைந்து காணப்பட்டிருந்தும், அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மாநகர சபைக்கு அதன் மூலம் ஆண்டுதோறும் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூபா 350,000 தொகை இழக்கப்பட்டிருந்தது. | நடப்பாண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலத்திரனியல் விளம்பர தொலைக்காட்சியினை திருத்தி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | சபையினால் 2018 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் கையிருப்பு காசாக ரூபா 18,342,000 தொகை காணப்பட்டிருந்தும், சபைக்கு வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதமாகவுள்ள கையிருப்பு நிதியை Money Market / Overnight எனும் சேமிப்புக் கணக்கொன்றை அக்கரைப்பற்று இலங்கை வங்கியில் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேலதிக நிதியினை உரிய அனுமதியுடன் வருமானம் உழைக்கும் மூலங்களில் அல்லது நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை 03 உழவு இயந்திரங்கள், 08 உழவு இயந்திர பெட்டிகள் மற்றும் 03 மோட்டார் சைக்கில்கள் பாவனையின்றி காணப்படுவதுடன் அவற்றினை திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திணைக்களங்களின் அனுமதியை பெற்றதும் ஏல விற்பனை செய்வதற்கும், தற்போது வானங்கள் ஒவ்வொன்றாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக 165 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், தார் மற்றும் கிறவல் வீதிகளினை மீள்புனரமைப்புக்காக ரூபா 1,345,500 தொகை மாநகர சபையினால் அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகளினை மீள்சீரமைத்து வீதியினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புப் பணங்களை பயன்படுத்தி செப்பனிடப்படாமல் காணப்படும் வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வெட்டப்பட்ட வீதிகளினை மீள்சீரமைத்து வீதியினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உடற்பயிற்சி நிலையத்தில் காணப்படும் 03 உடற்பயிற்சி உபகரணங்களை 03 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்து வாடகைக்கு வழங்குவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடற்பயிற்சி நிலையத்தில் காணப்படுகின்ற பழுதடைந்த உபகரணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உபகரணங்களை திருத்தமுன் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சந்தைப் பெறுமதி போன்றவை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நூல் கணக்கெடுப்பிற்கு சமர்ப்பிக்கப்படாத 796 நூல்களின் இழப்பு பெறுமதியினை உரியவர்களிடமிருந்து அறவீடு செய்து பதிவழிப்பதற்கும், சேதமடைந்த புத்தகங்களை முழுமையாக பதிவழிப்பு செய்து அதற்கு பதிலாக புதிய புத்தகங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டில் பொருட் கணிப்பீட்டுச் சபையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருட் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத நூல்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை சபையில் கடன் பெற்று இறந்த மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் நிலுவை ரூபா 441,900 தொகையினை உரியவர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவையினை செலுத்தி முடிக்கும் படி கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன். அக்கரைப்பற்று பிரதேச சபை காலத்தில் இருந்த கடன் நிலுவை மீதிகளினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய கடன் தொகையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாநகர சபையின் திண்மக்கழிவுகளை அட்டாளைச்சேனை திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்திற்கு வழங்கப்படுகின்ற போது ஒரு டொன் உக்கக்கூடிய கழிவிற்கு ரூபா 200 மற்றும் உக்காத கழிவிற்கு ரூபா 300 தொகையும் செலுத்தப்படுகின்றது. இருப்பினும், கழிவுகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்ளப்படாமையினால், மீளாய்வாண்டின் போது 3,573 டொன் உக்காத கழிவுகளாக கருதப்பட்டு ரூபா 1,072,199 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உக்கும் கழிவுகள் குறைவாகவே கிடைக்கப் பெறுவதால் கழிவுகள் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு வழங்கப்படுவதனால் போக்குவரத்து செலவு அதிகமாகும் காணப்படுகின்றது. இருந்தும், தற்போது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் உக்கக் கூடிய கழிவுகளையும் எமது சபையின் நில நிரப்பு தளத்தில் சேகரிக்கப்பட்டுள்ளது. | கழிவுகளை முறையாக தரம்பிரித்து பெற்றுக் கொள்வதற்கும், சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்வதற்கும், செலவினங்களை இழிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் திண்மக்கழிவு சேகரிப்பு மத்திய நிலைய இடம், விலங்கறுமனை போன்றவற்றிற்கு மீளாய்வாண்டு வரை சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 நிதி ஏற்பாடு வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| உள்ளுராட்சி அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 03 சரக்கு கொள்கலன்கள் ரூபா 5,910,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், இக் கடைகளை பொது மக்கள் பயன்படுத்துவதற்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரக்கு கொள்கலன்கள் கடையறைகளை கேள்வி கோரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 2024 இல் உள்ளுராட்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிக விரைவாக தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |

## 4.4 எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| உள்ளுர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் இலத்திரனியல் நூலகத்திற்காக ரூபா 2,848,078 செலவில் பொது நூலகம் 2022 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இதனை முழுமையாக செயற்படுத்துவதற்குத் தேவையான மென் பொருள், சேவர், பார் கோட் ரீடர் மற்றும் பார் காட் பிரின்டர் போன்ற இலத்திரனியல் உபகரண வசதிகளின்மையினால் இச் செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது. | உள்ளுர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலத்திரனியல் நூலகத்திற்கான உட்கட்டமைப்பு மற்றும் கணிணி வசதிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. ஏனைய உபகரணங்கள் மற்றும் மென் பொருட்களை மாநகர சபை நிதியிலிருந்தே கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. | இலத்திரனியல் நூலகத்தின் நோக்கத்தினை அடையக்கூடிய வகையில் மிக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |